சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பு அணிகளான தொண்டரணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, ஆதிதிராவிடர் நலக்குழு,தகவல் தொழில்நுட்ப அணி, தொழிலாளர் அணி மீனவர் அணி மருத்துவர் அணி வர்த்தக அணி ஆகிய அணிகளின் பகுதிதுணை அமைப்பாளர்கள் 761 நபர்களுக்கு தீப ஒளி திருநாளை முன்னிட்டு பரிசு பொருட்கள் வழங்கும் விழா சென்னை பாரிமுனையில் உள்ள ராஜா அண்ணாமலை மன்றத்தில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு பரிசுப் பொருட்கள் வழங்கி சிறப்புரையாற்றினார். இவ்விழாவில் பகுதிக் கழகச் செயலாளர்கள் எஸ்.முரளி, எம்.டி.ஆர்.நாகராஜ், இரா.நரேந்திரன், பி. ஸ்ரீராமுலு.கே.ஆர்.அபரஞ்சி,டி.சதிஷ்குமார் ,வே.பா பிரபாகரன் மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பகுதி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி வட்டம், நெல்லிக்குப்பம் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு மையங்களில் உள்ள மக்களுக்கு தீபாவளியை முன்னிட்டு புத்தாடைகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது இதில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் புத்தாடைகள் வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார் அருகில் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை ஆணையர் வள்ளலார் மாவட்ட ஆட்சியர் மு. பிரதாப் , மாவட்ட கழக செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ் ராஜ், ஒன்றிய செயலாளர்கள் கும்மிடிப்பூண்டி கி.வே.ஆனந்த் குமார், ஞாயிறு ஆனந்த்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமை திருத்தச் சட்ட முன்வடிவை – 18 மாதங்கள் கழித்து

ஆளுநர் ஆர்.என்.ரவி - அரசியல் காழ்ப்புணர்ச்சியில் திருப்பி அனுப்பியுள்ளார்!

சட்டப்பேரவையில் – நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு குற்றச்சாட்டு!

சென்னை, அக். 18-

ஆளுநர் ஆர்.என்.ரவியிடமிருந்து வரப்பெற்ற 25.08.2025 ஆம் நாளிடப் பெற்ற நேர்முகக் கடிதம் மற்றும் ஆளுநர் அவர்களால் திருப்பி அனுப்பப் பெற்ற 2024 ஆம் ஆண்டு தமிழ் நாடு நிதிநிலை நிருவாக பொறுப்புடைமை (திருத்தச்) சட்டமுன்வடிவு, ஆகியவை சட்டப்பேரவையில் நேற்று தாக்கல் செய்யப்பட்டு, அதன் மீது விவாதமும் வாக்கெடுப்பு நடைபெற்றது.

விவாதத்தின் நிறைவில் உரையாற்றிய நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, "இத்திருத்தச் சட்ட முன்வடிவை - 18 மாதங்கள் கழித்து ஆளுநர் ஆர்.என்.ரவி - அரசியல் காழ்ப்புணர்ச்சியில் திருப்பி அனுப்பியுள்ளார்" என்று குற்றம் சாட்டினார்.

சட்டப்பேரவையில் - இச் சட்டமுன்வடிவு மீதான விவாதத்தில் அமைச்சர் தங்கம் தென்னரசு ஆற்றிய உரை வருமாறு:

25-8-2025 ஆம் ஆண்டு திருப்பி அனுப்பப்பட்டிருக்கக் கூடிய 2024 ஆம் ஆண்டு தமிழ் நாடு நிதிநிலை நிருவாக பொறுப்புடைமை (திருத்தச்) சட்டமுன்வடிவு எண் 12/2024 மறு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டுமென்கிற என்னுடைய கோரிக்கையைத் தொடர்ந்து, மாமன்ற உறுப்பினர்கள் இங்கே தங்களுடைய கருத்துகளை சொல்லி இருக்கிறார்கள். இந்த அவைக்கு நானும் சில கருத்துகளை, விளக்கங்களை இதுகுறித்து தெரிவிப்பது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

ஒன்றிய அரசிற்கான நிதி நிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தை நாடாளுமன்றம் 2003 ஆம் ஆண்டு இயற்றுவதற்கு ஓராண்டிற்கு முன்னதாகவே தனது சொந்த சட்டத்தை இயற்றி நிதிநிலை நிர்வாகத்தில் அரசினுடைய பொறுப்புடைமையை சட்டபூர்வமாக்கியதில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. இந்த சட்டம் நிறைவேற்றப்பட்ட அந்த ஆண்டில் கூட அரசினுடைய பதவிக் காலத்தைக் கடந்தும் செயல்பட வேண்டிய இலக்குகள் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கக்கூடிய நிகழ்வுகள்

இருந்திருக்கிறது. அதுமுதல் அடுத்தடுத்து வந்திருக்கக்கூடிய அரசுகள் வளர்ந்து வரக்கூடிய சமூக-பொருளாதார தேவைகளை பூர்த்தி செய்வதற்கான இலக்குகளை மாற்றியமைக்கும் அதேவேளையில் நிதி பொறுப்பைத் தொடர்ந்து நிலைநிறுத்தி வருகின்றன.

தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்திற்கு சட்டப்பேரவைத் தேர்தல்களுக்கு முன்னதாக வந்த ஆண்டுகளில் மாநில சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட திருத்தங்களினுடைய பட்டியலை நான் இந்த அவையில் படிக்க விரும்புகிறேன். தமிழ் நாடு நிதிநிலை நிருவாக பொறுப்புடைமை (திருத்தச்) சட்டம், 2020, 2020 ஆம் ஆண்டின் சட்டம் எண் 21. நிதிக் குறியீடு இலக்குகள் 2021-2022 ஆம் ஆண்டுக்கு மாற்றப்பட்டிருக்கிறது. அதேபோல, தமிழ் நாடு நிதிநிலை நிருவாக பொறுப்புடைமை (திருத்தச்) சட்டம், 2015, 2015 ஆம் ஆண்டின் சட்டம் எண் 6. நிதிக் குறியீடு இலக்குகள் என்பது 2016-2017 ஆம் ஆண்டுக்கு ஏற்கெனவே மாற்றப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு நிதிநிலை நிருவாக பொறுப்புடைமை (திருத்தச்) சட்டம், 2010, 2010 ஆம் ஆண்டினுடைய சட்டம் எண் 43. அதற்கான நிதிக் குறியீடு இலக்குகள் 2011-2012 ஆம் ஆண்டிற்கு மாற்றப்பட்டிருக்கிறது. சட்டம் இயற்றுவது என்பது ஒரு தொடர்ச்சியான செயல்முறை என்பதை நாம் புரிந்துகொள்வது அவசியம்.

இயற்றப்படக்கூடிய எந்தவொரு சட்டமும் ஆட்சியில் இருக்கக்கூடிய அரசை கருத்தில்கொள்ளாமல் நிதி நிலைத் தன்மை, திட்டங்களுடைய தொடர்ச்சி மற்றும் நீண்டகால சமூக-பொருளாதார இலக்குகளை உறுதி செய்வதை நோக்கமாக அது கொண்டிருக்க வேண்டும். குறிப்பாக, நிதி நிலை நிருவாக பொறுப்புடைமை சட்டங்களுடைய செயல்பாடு ஓர் அரசு அல்லது நிதிக் குழுவினுடைய பதவிக் காலத்தோடு அது நின்றுவிடுவதில்லை. அவை நீண்டகால நிதிநிலை இலக்குகளை நோக்கமாக அது கொண்டிருக்கிறது. உதாரணமாக, ஒன்றிய அரசினுடைய நிதி நிலை நிருவாக பொறுப்புடைமை சட்டம் 2003 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது. ஆனால், மத்தியில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னரே 2004 ஆம் ஆண்டிலே அந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்திருக்கிறது.

அரசியலமைப்புச் சட்டத்தினுடைய பிரிவு 280-ன்கீழ் அரசினுடைய நிதி தொடர்பான பரிந்துரைகளை வழங்க நிதி ஆணையம்-*Finance commission* அமைக்கப்படுகிறது. ஆனால், நிதிநிலை நிருவாக பொறுப்புடைமை சட்டங்கள் நிதிக் குழு பரிந்துரைகள் நடைமுறையிலே இருக்கக்கூடிய காலத்துடன்தான் ஒத்துப்போக வேண்டுமென்று அரசியலமைப்புச் சட்டம் எந்த இடத்திலும் கூறவில்லை. தமிழ்நாடு சட்டமன்றம் இத்தகைய சட்டங்களை நிறைவேற்றுவதற்கு முழு உரிமை பெற்றிருக்கிறது. எனவே, ஆளுநருடைய கருத்துகள் அரசியலமைப்புச் சட்டத்தோடு இணக்கமாக இல்லை என்பதை நான் இந்த மன்றத்திலே தெரிவிக்க விரும்புகிறேன். ஒன்றிய அரசினுடைய நிதிநிலை நிருவாக பொறுப்புடைமை சட்டத்தின் கீழ் நிதி ஒருங்கிணைப்புக்கான சறுக்கல் பாதை *glide path to fiscal consolidation* என்ற கருத்தாக்கத்தை ஒன்றிய அரசே ஏற்கெனவே ஏற்றுக் கொண்டிருக்கிறது. அது இங்கு குறிப்பிடத்தக்கது. இதன்மூலம் ஒரு குறிப்பிட்ட காலக் கெடு ஏதுமில்லாமல் சட்டப் பூர்வமான இலக்கு ஒத்திவைக்கப்படுகிறது. காலக் கெடுவில் நெகிழ்வுத் தன்மை என்பது நிதி ஒழுங்கை நீர்த்துப் போகச் செய்வதாக இருக்காது என்பதை இது நிரூபிக்கிறது. மாறாக, மாறிவரக்கூடிய பேரியல் பொருளாதாரம் மற்றும் நிதி நிலைமைகளை *macroeconomic and fiscal conditions* இந்த கருத்தாக்கம் அங்கீகரிக்கிறது. 2024-2025 மற்றும் 2025-2026 ஆம் ஆண்டுகளுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டங்கள் வருவாய் பற்றாக்குறைகள் மற்றும் நிதிப் பற்றாக்குறைகளை வெளிப்படையாக அனுமதித்து இருக்கின்றன.

மேலும், அவை சட்டமன்றத்தால் முறையாக நிறைவேற்றப்பட்டு, ஆளுநர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கின்றன. இந்த சட்டமுன்வடிவுகளுக்கு ஒப்புதல் தராமல், திருப்பி அனுப்புவதற்கு இப்போது முடிவெடுத்திருப்பது, ஆளுநரின் நிலைப்பாட்டில் இருக்கக்கூடிய முரண்பாட்டை பிரதிபலிக்கிறது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 200-வது பிரிவு ஒரு சட்டமுன்வடிவு, பண முன்வடிவு (*Money Bill*) தவிர, ஆளுநரிடம் சமர்ப்பிக்கும்போது, அவர் அதை மறுபரிசீலனைக் கான குறிப்புடன் சட்டமன்றத்திற்கு திருப்பி அனுப்பலாம் என்று கூறுகிறது. எவ்வாறாயினும், சட்டமுன்வடிவானது, சட்டமன்றத்தில் திருத்தங்களுடன் அல்லது திருத்தங்கள் இன்றி, மீண்டும் நிறைவேற்றப்படுமாயின், ஆளுநர் அதற்கான ஒப்புதலை நிறுத்தி வைக்க இயலாது. தற்போதைய நேர்வில்கூட, சட்டமுன்வடிவை விரைவில் திருப்பி அனுப்ப வேண்டுமென்ற அரசியலமைப்புச் சட்டத்தினுடைய விதிகள் *as soon as possible, as early as possible* என்ற அந்த விதிகள் பின்பற்றப்படவில்லை. 200-வது பிரிவின் உள்ளார்ந்த நோக்கத்திற்கு எதிராக, ஆளுநர் அவர்கள் 18 மாதங்களுக்கும் மேலாக அந்த ஒப்புதலை நிறுத்தி வைத்திருக்கிறார்.

எனவே, மசோதாவைத் திருப்பித் தருவதற்கு ஆளுநர் குறிப்பிட்டுள்ள காரணங்கள் சட்டப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளத்தக்கவை அல்ல. மேலும், அரசியலமைப்பின் 200-வது பிரிவின்கீழ் வழங்கப்பட்டுள்ள முதல் வழிவகையானது, சட்டமன்றம் இந்த சட்டமுன்வடிவை மறுபரிசீலனை செய்து சட்டமன்றத்தில் நிறைவேற்றினால் ஒப்புதலுக்காக ஆளுநரிடம் சமர்ப்பிப்பதற்கு அது வழிவகை செய்கிறது.

எனவே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் விதி 143-ன்கீழ் 22-2-2024 அன்று தமிழ் நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டு, ஆளுநர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்படாமல் திருப்பி அனுப்பப்பட்ட தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமை (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2024)-ஐ இந்த மாமன்றம் மறுபரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு உரையாற்றினார்.

> ஒன்றிய அரசினுடைய நிதிநிலை நிருவாக பொறுப்புடைமை சட்டம் 2003 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது. ஆனால், மத்தியில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னரே 2004 ஆம் ஆண்டிலே அந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்திருக்கிறது.

நந்தனம் கி.மதி, கோவி லெனின் பங்கேற்பு!

121 அ வட்ட கழக நிர்வாகிகளுக்கு பரிசு பொருட்கள் வழங்கும் விழா!

மயிலை த.வேலு.எம்,எல்,ஏ., வழங்குகிறார்! வட்டச் செயலாளர் சீ.கிருஷ்ணமூர்த்தி அறிக்கை!

சென்னை, அக். 18-

சென்னை தென் மேற்கு மாவட்டம் 121 அ வட்டத்தில் வட்டச் செயலாளர் சீ.கிருஷ்ணமூர்த்தி தலைமையில் 121அ வட்ட கழக நிர்வாகிகள் கூட்டம் இன்று சனிக்கிழமை 18.10.2025 மாலை 6.00 மணியளவில் லாயிட்ஸ் சாலை ரங்கா ரோடு திருமண மண்டபத்தில், தீப ஒளி திருநாளை முன்னிட்டு 121அ வட்டகழக நிர்வாகிகளுக்கு தீப ஒளி பரிசு பொருட்கள் வழங்கும் விழா நடைபெற உள்ளது.

இந்த தீப ஒளி பரிசு பொருட்கள் வழங்கும் விழாவில் மாவட்ட நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள் , மாவட்ட பிரதிநிதிகள், BLA2 / BDA / BLC மற்றும் அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள், அனைவருக்கும் பரிசு பொருட்களை மாவட்ட கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., பகுதி நந்தனம் கி மதி எம்.சி. மற்றும் கோவி லெனின் மயிலாப்பூர் தொகுதி பார்வையாளர் ஆகியோர் வழங்கின்றனர்.

இவ்விழாவில் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு வட்ட கழகத்தின் சார்பில் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு வட்டச் செயலாளர் சீ.கிருஷ்ணமூர்த்தி அறிக்கை விடுத்துள்ளார்.

தீபஒளி திருநாளை முன்னிட்டு சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம்விளக்கு சட்டமன்ற தொகுதி, மேற்கு பகுதி 110வது, வார்டு கழக நிர்வாகிகள் 600 நபர்களுக்கு, சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு அவர்கள் பண்டிகை கால நலத்திட்ட உதவிகள் வழங்கி அவர்களுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்தார். இந்நிகழ்வின்போது பகுதி கழக செயலாளர் வினோத் வேலாயுதம், வட்ட செயலாளர்கள் த.குணசேகரன், கே. எஸ். தினேஷ்பிரபு பொதுக்குழு உறுப்பினர் எம்.டி.ஆர். நாதன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துபாய் வி.ஆர்.விஜய், ச.அசோக்குமார், எம்.டி.ஆர். சாரதி மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

வேதாரண்யம் அய்யனார் கோயிலுக்குச் சொந்தமாக சமுதாயக் கூடம் அமைத்துத் தரப்படும்!

திருவண்ணாமலையில் பக்தர்களுக்கு ரூ.64.30 கோடியில் தங்கும் விடுதி!

சட்டப்பேரவையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பதில்!

சென்னை, அக்.18-

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நேற்று (17.10.2025) வினா - விடை நேரத்தின்போது, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, வேதாரண்யம் சட்டமன்ற உறுப்பினர் ஓ.எஸ்.மணியன், சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி ஆகியோர் எழுப்பிய வினாக்களுக்கு பதிலளித்தார்.

சட்டமன்ற உறுப்பினர் ஓ.எஸ்.மணியன்: வேதாரண்யம் தொகுதி, காடந்தேத்தியில் உள்ள அருள்மிகு அய்யனார் திருக்கோயிலில் பக்தர்களுக்கு தங்குமிடம் கட்ட அரசு ஆவண செய்யுமா?

அமைச்சர் பி.கே. சேகர்பாபு : காடந்தேத்தியில் ஆதினமழை அய்யனார் திருக்கோயிலுக்கு பக்தர்கள் தங்கும் விடுதி கட்டுவதற்குண்டான போதிய இடவசதி இல்லை. இருப்பினும், அந்த திருக்கோயிலுக்கு சொந்தமான இடத்திலோ, மாவட்டத்தில் இருக்கின்ற திருக்கோயிலுக்கு சொந்தமான இடங்களிலோ ஏதாவது ஒரு இடத்தை தேர்வு செய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்குண்டான முயற்சியை துறை மேற்கொள்ளும். இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு தான் 261 கோடி ரூபாய் செலவில் 38 பக்தர்கள் தங்கும் விடுதிகள் கட்டுவதற்கு உத்தரவிடப்பட்டு அதில் திருவண்ணாமலை உட்பட பல்வேறு இடங்களில் பக்தர்கள் தங்கும் விடுதிகள் கட்டி முடிக்கப்பட்டு பக்தர்களின் பயன்பாட்டிற்கு விடப்பட்டுள்ளது என்பதை பேரவை தலைவர் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் ஓ.எஸ்.மணியன் அவையில் இல்லாததால் அவருக்கு பதிலாக சட்டமன்ற உறுப்பினர் கோவிந்தசாமி: நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் சட்டமன்ற தொகுதி காடந்தேத்தியில் அமைந்துள்ள பழமையான அருள்மிகு அய்யனார் திருக்கோயிலுக்கு வாரந்தோறும் புதன் மற்றும் சனிக்கிழமைகளில் மிக அதிக அளவில் பொதுமக்கள் வருகை தந்து வழிபாடு செய்கின்றனர். இது இப்பகுதி மக்களின் மனதில் பயபக்தி மிக்க கோயிலாக உள்ளதால் நம்பிக்கையோடு சாமி தரிசனம் செய்கிறார்கள் பிற மாவட்டங்களில் இருந்தும் திருக்கோயிலுக்கு வந்து வழிபடவும் தங்கள் வேண்டுதல்களை நிறைவேறிய பின்பு நன்றி கடன் செலுத்தவும் வருகிறார்கள். எனவே பக்தர்களின் நலன் கருதி குளியலறை மற்றும் கழிப்பறை வசதியோடு ஒரு சமுதாயக்கூடம் அமைத்து தர வேண்டும் என்பதை அமைச்சர் அவர்களை கேட்டு அமைகிறேன்.

அமைச்சர்: கடந்த இரண்டு நாட்களாக சமுதாயக்கூடம் மற்றும் திருமண மண்டபங்கள் கட்டுகின்ற கேள்விகள் அவையில் எழுப்பப்படுகின்ற போது நம்முடைய உறுப்பினர் கோவிந்தசாமி அவர்கள் இந்த அவையிலே தான் இருந்தார். மாண்பமை உச்சநீதிமன்றத்தில் இது தொடர்பான வழக்கு நிலுவையில் உள்ளதால் அந்த வழக்கின் தீர்ப்பை சட்டப் போராட்டம் நடத்தி திராவிட மாடல் ஆட்சியின் நாயகன் எங்கள் முதல்வர் வெற்றி பெற்ற பிறகு நிச்சயமாக அவர் கூறுகின்ற அந்த சமுதாயக்கூடம் கட்டித் தரப்படும் என்பதை பேரவை தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி: திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலிலே அதிக அளவு தெலுங்கானா, ஆந்திர பக்தர்

னார் திருக்கோயிலுக்கு வாரந்தோறும் புதன் மற்றும் சனிக்கிழமைகளில் மிக அதிக அளவில் பொதுமக்கள் வருகை தந்து வழிபாடு செய்கின்றனர். இது இப்பகுதி மக்களின் மனதில் பயபக்தி மிக்க கோயிலாக உள்ளதால் நம்பிக்கையோடு சாமி தரிசனம் செய்கிறார்கள் பிற மாவட்டங்களில் இருந்தும் திருக்கோயிலுக்கு வந்து வழிபடவும் தங்கள் வேண்டுதல்களை நிறைவேறிய பின்பு நன்றி கடன் செலுத்தவும் வருகிறார்கள். எனவே பக்தர்களின் நலன் கருதி குளியலறை மற்றும் கழிப்பறை வசதியோடு ஒரு சமுதாயக்கூடம் அமைத்து தர வேண்டும் என்பதை அமைச்சர் அவர்களை கேட்டு அமைகிறேன்.

அமைச்சர்: கடந்த இரண்டு நாட்களாக சமுதாயக்கூடம் மற்றும் திருமண மண்டபங்கள் கட்டுகின்ற கேள்விகள் அவையில் எழுப்பப்படுகின்ற போது நம்முடைய உறுப்பினர் கோவிந்தசாமி அவர்கள் இந்த அவையிலே தான் இருந்தார். மாண்பமை உச்சநீதிமன்றத்தில் இது தொடர்பான வழக்கு நிலுவையில் உள்ளதால் அந்த வழக்கின் தீர்ப்பை சட்டப் போராட்டம் நடத்தி திராவிட மாடல் ஆட்சியின் நாயகன் எங்கள் முதல்வர் வெற்றி பெற்ற பிறகு நிச்சயமாக அவர் கூறுகின்ற அந்த சமுதாயக்கூடம் கட்டித் தரப்படும் என்பதை பேரவை தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி: திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலிலே அதிக அளவு தெலுங்கானா, ஆந்திர பக்தர்கள் வருகிறார்கள். அவர்களுக்கு வேண்டிய வசதிகளை செய்யும்போது பல தடைகளை ஏற்படக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே அந்த கோயிலுக்காக நம்முடைய அரசின் மூலம் என்னென்ன வசதிகள் செய்யப்பட்டு இருக்கின்றது என்பதை அமைச்சர் அவர்கள் அவைக்கு தெரிவிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

அமைச்சர்: பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் கேள்வி எழுப்புகின்ற போது தடைகள் பல ஏற்படுத்துகிறார் என்று குறிப்பிட்டார். உண்மைதான். தடைகள் பல உண்டு என்றாலும் அதை தகர்த்தெறிகின்ற திடந்தோள்கள் நம்முடைய முதல்வருக்கு உண்டு. என்பதை மெய்ப்பிக்கின்ற வகையில் பல்வேறு சட்டப் போராட்டங்களுக்கிடையே வெற்றியை பெற்று வருகிறோம். சமீபத்தில் கூட மாண்பமை உயர்நீதிமன்ற நீதிபதிகள் இருவர், தொடுக்கப்பட்ட வழக்கின் காரணமாக நேரடியாக வந்து களத்தில் ஆய்வு செய்து 25 பணிகள் நடைபெற்று வந்த நிலையில் மாண்பமை நீதிபதிகள் நேரடிகள ஆய்வுக்கு பின் 17 பணிகளுக்கு அனுமதி அளித்திருக்கின்றனர். இந்த ஆட்சி ஏற்படுவதற்கு முன்பு அந்த திருக்கோயிலுக்கு வருகை தருகின்ற பக்தர்களின் எண்ணிக்கை விட தற்போது சுமார் 70% கூடுதலாக பக்தர்களின் வருகை கூடுதலாகி இருக்கின்றது.

முதலமைச்சர் அவர்கள், அந்த மாவட்டத்தின் அமைச்சர் வேலு அவர்களையும், அந்த மாவட்டத்தை சேர்ந்த துணை சபாநாயகர் பிச்சாண்டி அவர்களையும், துறையின் அமைச்சரான என்னையும் மூன்று பேர் குழுவாக நியமித்து தினந்தோறும் திருவண்ணாமலை திருக்கோயிலுக்கு வருகை தருகின்ற பக்தர்களின் எண்ணிக்கைக்கு தகுந்தாற்போல் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளார். அதன்படியே பணிகளை மேற்கொண்டு வருகிறோம். உதாரணத்திற்கு சொல்ல வேண்டும் என்றால் கூடுதலாக 64.30 கோடி ரூபாய் செலவில் பக்தர்கள் தங்கும் விடுதி கட்டப்பட்டு வருகின்றது. அதேபோல பொதுப்பணித்துறை சார்பில் அருமை வேலு அவர்கள் முதலமைச்சர் அவர்களின் அனுமதியை பெற்று 12 இடங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியினை (RO Plant) ஏற்படுத்தி வருகிறார்கள்.

மேலும், கிரிவலப் பாதையில் சுமார் 12 இடங்களில் கழிப்பிட வசதிகள் பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களின் முயற்சியால் சி.எஸ்.ஆர். நிதியுதவி மூலம் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. சமீபத்தில் கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திருவண்ணாமலை திருக்கோயிலில் கோபுரங்கள் மற்றும் விமானங்கள் மின்னொளியால் ஜொலிக்கின்ற வண்ணம் ஏழரை கோடி ரூபாய் செலவிலான திட்டத்தை துவக்கி வைத்து இன்றைக்கு கோபுரங்கள் மின்னொளி பெற்று பிரகாசமாக இருக்கின்றது.

அதோடு மட்டுமல்ல இத்திருக்கோயிலுக்கு லட்சக்கணக்கான பக்தர்கள் வருகின்ற போது நீண்ட க்யூ வரிசையில் காத்திருக்கிறார்கள் என்பதை கருத்தில் கொண்டு சுமார் ரூ. 4.50 கோடி செலவில் க்யூ வரிசை காம்பளக்ஸ் ஏற்படுத்துகின்ற பணியும் தற்போது நடைபெற்று வருகின்றது. போர்க்கால அடிப்படையில் பக்தர்களின் தேவைகளை நிறைவேற்றுகின்ற ஒரு அரசாக, ஒரு துறையாக இந்த துறை செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது.

பெருந்திட்ட வரைவின் வாயிலாக இத்திருக்கோயிலின் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு நிலையில் அந்த பணிகளை முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைக்க இருக்கிறார்கள் என்பதை பேரவை தலைவர் வாயிலாக துணை தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பி.கே. சேகர்பாபு பதிலளித்தார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

"அன்னம் தரும் அமுதகரம்" 240 வது நாள்!

எழும்பூர் தெற்கு பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை,அக்.18-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 240 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (17.10.2025), எழும்பூர் தெற்கு பகுதி: 1) வட்டம் 61, எழும்பூர் மகப்பேறு மருத்துவமனை, பாண்டியன் சாலை. 2) வட்டம் 61 அ, சின்ன குழந்தை தெரு, வரதராஜபுரம், புதுப் பேட்டை ஆல்பர்ட் திரையரங்கம் எதிரில், குடிசை பகுதி, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ் நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ் நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதி மொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியாராஜன், வி.சுதாகர், சொ.வேலு, கோ.ஏகப்பன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா , புனிதவதிஎத்திராசன், கே.எஸ். எம்.நாதன், கோ.மணி, ஜி. தாமோதரன், பி.எம்.யாழினி, ராஜேஸ்வரிஸ்ரீதர், பரிதிஇளம் சுருதி, எழும்பூர் தெற்கு/ வடக்கு வட்ட கழக செயலாளர்கள்: வி.விஜயகுமார், ஆர். பாபு, டால்பின் எஸ்.அரிகிருஷ்ணன், இ.மொய்தீன், வான்மதி கதிரவன், எல்.சுந்தர்ராஜன், தி.தயாளன், வி.அபாய், சு.மனோகர், ந.பாலு, ஆர்.எம். ரங்கநாதன், சி.சேகர், ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியத்துக்குட்பட்ட பாரிவாக்கம், வரதராஜபுரம் ஆகிய ஊராட்சிகளுக்கு உட்பட்ட பாக ஒருங்கிணைப்பாளர் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட செயலாளர் அமைச்சர் ஆவடி சாமு.நாசர் ஆலோசனை படி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி வழிகாட்டுதல்படி ஒன்றிய கழகச் செயலாளர் ப.ச.கமலேஷ் தலைமையில் நடைபெற்றது. உடன் ஒன்றிய கழக நிர்வாகிகள் கிளைக் கழக செயலாளர் கிளை கழக நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.